DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: கோவிந்தன் | Father's Name: வெங்கடேசன் |
| Village: திம்மாம்பேட்டை | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 29.11.2022.

அ.வ.எண்.**31/2018 -** பி.வா.சா.**1**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை –

2ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் எனது மனைவியின் அக்கா மகன் ஆவார். வழக்கு சொத்து சம்பந்தமான ருக்கம்மாள் பெயரில் உள்ள 29.07.1939 தேதியிட்ட பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்ததில்லை. ருக்கம்மாள் வாதி கோவிந்தராஜின் பாட்டி என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. வழக்கு சொத்தை ருக்கம்மாளுக்கு பிறகு வாதியும், அவரது தந்தையும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு அதுவும் தெரியாது நான் தான் அந்த சொத்தை என் கையில் வைத்து வருகிறேன். வழக்கு சொத்திற்கு பட்டா வாதி கோவிந்தராஜ் பெயரில் ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா எண்.330–ன் படி வாதி பெயருக்கு 17.07.1995 அன்று பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 09.05.2011 அன்று வாதி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.